**Previous Examination date – 12.06.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 67 of 2026**

**Deposition of Witness P.W.6**

| | |
|---|---|
| **Name : பிரதாப்** | **Father/Husband's Name : பெருமாள்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 16.06.2026.**

**Accused produced.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி அடிவாரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.11.2025ம் தேதி 16.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது உமாராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விசாரணை செய்து பழனி அடிவாரம் காவல்நிலைய கு.எண்.291/2025 பிரிவு 305(b) BNS–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை நான் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகள் சண்முகம், கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் உஷாராணி, முனியப்பன், வாசுதேவன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி ஈரோடு மாவட்டம் சத்திய மங்கலம் காவல் நிலைய குற்ற எண்.621/2025 என்ற வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் சுரேந்திரன், கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலையில் கடந்த 12.11.2025ம் தேதி பழனிக்கு சென்று இரவு அங்கு அடிவாரத்தில் உள்ள ஒரு Chips கடைக்கு முன்பாக Sidelock போட்டு நின்றிருந்த TN 94 4380 என்ற Yamaha Bikeயினை அதன் Side Lockயினை உடைத்து திருடியதாகவும்

ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில் 10.12.2025ம் தேதி 13.15 மணிக்கு கோபிசெட்டிபாளையம் மாவட்ட கிளை சிறையில் சம்பிரதாய கைது செய்த பின்னர் அன்றே 15.00 மணிக்கு பழனி காவல் நிலைய சார்பு ஆய்வாளராகிய என்னிடம் சத்தியமங்கல காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மணிவேலு என்பவர் சத்தியமங்கல காவல் நிலைய குற்ற எண்ணில் கைப்பற்றிய TN 94 4380 என்ற பதிவெண் கொண்ட Yamaha Facino என்ற இருசக்கர வாகனத்தை படிவம் 91ல் ஒப்படைத்ததை கைப்பற்றி பழனி நீதிமன்றத்தில் ஆஜர் செய்து RPR No.7/2026 பெறப்பட்டது. சார்பு ஆய்வாளர் மணிவேலு அவர்களிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 11.12.2025ம் தேதி PT Warrant பெறப்பட்டு பின்னர் 15.12.2025ம் தேதி எதிரியை இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.**6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. **TN 94 4380 என்ற பதிவெண் கொண்ட Yamaha Facino என்ற இருசக்கர வாகனத்தின் புகைப்படம் மற்றும் CD அ.சா.ஆ.7** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 305(b) BNS–ன் கீழ் 21.01.2026ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.16 17:28:03 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.